கொடுக்க மாட்டோம் என்று மறுப்பு தெரிவிக்கிறார்கள். இவை களெல்லாம் இல்லாத வகையில் மாண்புமிகு அங்கத்தினர்களும் துணை செய்தால் விரைவில் எடுத்துக் கொடுக்க முடியும்.

முத்தூர் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*135 வினு—**திரு. மு. பழனிசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி முத்தூர் கிராமம், ஊடையம் துத்திக் குளத்தில் உள்ள அரிசனங்கள் அண்மையில் வீட்டுமனை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) விண்ணப்பம் ஏதும் வரவில்லை. எனினும் குறிப்பிட்ட கிராமத்தைச் சார்ந்த அரிசன மக்களுக்கு வீட்டுமனை அளிப் பதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பர வரைவு 11—10—1972 தேதியில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தற்பொழுது அரிசன நலத்துறையில்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைகள் வழங்கப் படுவது தொடர்ந்து நடைபெறுகிறதா அல்லது வேறொரு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சந்தேகமே இல்லை, இந்தத் துறைதான் செய்துகொண்டு வருகிறது.

காரணி கிராம இருளர்களுக்கு வீட்டு வசதி

*136 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், காரணி கிராமத்தில் இருளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தினை விரைந்து நிறை வேற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவடையும் ?

1974 [சனவரி 24]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) காரணி கிராமம் குளப்புறம்போக்கு சர்வே எண் 165-ல் இருளர்கள் குடியேற விருப்பப்படாததால் சைதாப்பேட்டை தனித் தாசில்தார் வேறு நிலத்தை நில ஆர்ஜிதம் செய்ய தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்தக் கிராமத்தில் செட்டில்மெண்ட் வேலை முடிந்துவிட்டதால், இருளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தில் தாமதமில்லாமல் வேறு தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எடுத்த இடத்திலே குடியேற முன்வந்தால் எப்பொழுதோ முடிந் திருக்கும். கொடுக்கும் இடத்தில் குடியேற மறுப்பதால் வேறு இடம் பார்க்க வேண்டியுள்ளது. ஆகவே, அவர்கள் விருப் பப்படியே பார்க்க வேண்டுமென்று இருப்பதால் நாட்கள் ஆகிறது. இதுதான் தாமதத்திற்குக் காரணம்.

மானாமதுரையருகேயுள்ள வைகைப் பாலம்.

*137 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை வைகையில் உள்ள மேம்பாலம் பழுதுப்பட்டு இருப்பது உண்மையா?

(இ) அதை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(உ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) & (உ) இவ்வேலையை ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத் தில் மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் ரூபாய் 35 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. மத்திய அரசு அனுமதி பெற்றதும் இவ்வேலையை ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துக் கொள்ளக் கூடும்.